செ.வெ.எண்:35/ஜனவரி நாள்:21.01.2016

# செய்திக்குறிப்பு

**தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக நிர்வாக கிளை, சென்னை அவர்களால் அறிவிக்கப்பட்ட சுருக்கெழுத்துத் தட்டச்சர்** பணிக்காலியிடத்திற்கு சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்ககத்தால் மாநில பதிவு மூப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பதிவு மூப்பு மற்றும் தகுதியுடைய பதிவுதாரர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட உள்ளனர்.

**கல்வித்தகுதி :**

1. 10-ம் வகுப்பு பொதுக்கல்வி தேர்ச்சி
2. தட்டச்சு - தமிழ், ஆங்கிலம் மேல்நிலை தேர்ச்சி
3. சுருக்கெழுத்துத் தட்டச்சில் தமிழ், ஆங்கிலம் மேல்நிலை தேர்ச்சி

அல்லது

சுருக்கெழுத்துத் தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலம் இவற்றில் ஏதாவதொன்றில் மேல்நிலையும் மற்றொன்றில் இளநிலை தேர்ச்சி சான்று பெற்று பதிவு செய்திருக்க வேண்டும்.

**வயதுவரம்பு :** 01.07.2015 அன்று

ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் 18 முதல் 35 வரை
பிற்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 18 முதல் 32 வரை
பொதுப்பிரிவினர் 18 முதல் 30 வரை
**அரசு விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு உண்டு**

**உத்தேச பதிவு மூப்பு**

| | |
|---|---|
| முன்னுரிமை உள்ளவர்கள் அனைத்து வகுப்பினரும் (மாற்றுத்திறனாளிகள் உட்பட) | : 18.01.2016 வரை |
| முன்னுரிமையற்றவர்கள் அனைத்து வகுப்பினரும் | : 18.01.2016 வரை |

மேற்கண்ட தகுதிகள் உடைய பதிவுதாரர்கள் **சுருக்கெழுத்துத் தட்டச்சர்** பணிக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் **உடன்** தேதிக்குள் நேரில் வருகை புரிந்து பரிந்துரைக்கப்படவுள்ள பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதனை உறுதி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**